**செப்டம்பர் – 12**

# TNPSC துளிகள்


- சீனாவின் ஹீ ஜிடிங் மற்றும் ரென் சியாங்யு ஆகியோரை வீழ்த்தி சாத்விக்சாய்ராஜ் ரங்கிரெட்டி மற்றும் சிராக் ஷெட்டி ஆகியோர் சீனாவில் நடைபெற்ற சீனா மாஸ்டர்ஸ் பூப்பந்தாட்டப் போட்டியில் ஆடவர் இரட்டையர் பட்டத்தை வென்றனர்.
- 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் பேடிங்கிலோ-போமா வலசை போகும் நிலப்ப ரப்பானது தெற்கு சூடானின் முதல் யுனெஸ்கோ உலக பாரம்பரியத் தளமாக அறிவிக்கப் பட்டுள்ளது.
    - இது போமா தேசியப் பூங்கா மற்றும் பேடிங்கிலோ தேசியப் பூங்கா ஆகியவற்றை உள்ளடக்கியதோடு சிறந்த நைல் வலசை போகும் நிலப்பரப்பின் (GNML) ஒரு பகுதியாகவும் உருவாகியுள்ளது.
- ஒடிசாவின் பாலசோர் மாவட்டத்தில் உள்ள உதயபூர்-தல்சாரி வனப்பகுதியில் உள்ள சவுக்கு மரத் தோட்டத்தில் இருந்து ஐந்து இளம் ஒராங்குட்டான்கள் மீட்கப்பட்டன.
    - ஒராங்குட்டான்கள் IUCN அச்சுறுத்தப்பட்ட உயிரினங்களின் செந்நிறப் பட்டியலில் மிக அருகி வரும் இனமாக வகைப்படுத்தப்பட்டுள்ளன என்பதோடு மேலும் இவை இயற்கையாக இந்தோனேசியா மற்றும் மலேசியாவின் காடுகளில் காணப் படுகின்றன, இந்தியாவில் அல்ல.
- சிறந்த காற்றின் தரத்திற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தவும் நடவடிக்கைகளை ஊக்குவிக்கவும் நீல வானத்திற்கான சுத்தமான காற்றின் சர்வதேச தினமானது 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 7 அன்று அனுசரிக்கப்பட்டது.
    - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Clean Air, Healthy Choices: Acting Together for People and Planet" என்பதாகும்.
- காவல்துறை மற்றும் சட்டத்தை அமல்படுத்தும் முகமைகளுக்கு இடையிலான சர்வதேச ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் வகையில் சர்வதேச காவல்துறை ஒத்துழைப்பு தினமானது செப்டம்பர் 7 அன்று அனுசரிக்கப்பட்டது.
    - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Protecting against Vulnerability – Building Trust and Legitimacy in Policing" என்பதாகும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்


## புதிய இந்து சமய அறநிலையத் துறை

- தலைமைச் செயலகத்தில் தனி இந்து சமய அறநிலையத் (HR&CE) துறையை உருவாக்க தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.
- இந்தப் புதிய துறையானது சென்னையில் உள்ள நுங்கம்பாக்கத்தில் அமைந்துள்ள கள அளவிலான பிரிவான இந்து சமய அறநிலையத் துறை ஆணையரகத்தின் மீது நிர்வாகக் கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கும்.
- தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலையக் கொடைகள் சட்டம், 1959 ஆனது இந்து மத நிறுவனங்கள் மற்றும் அறநிலையக் கொடைகளின் நிர்வாகத்திற்கான சட்டப்பூர்வக் கட்டமைப்பை வழங்குகிறது.
- இந்து சமய அறநிலையத் துறையின் ஆணையர் இத்துறையின் தலைவராவார், மேலும் அவர் சட்டத்தின் கீழ் நிர்வாக விவகாரங்கள் மற்றும் சட்டப்பூர்வ செயல்பாடுகளைக் கையாளுவார்.

- இந்த நடவடிக்கையானது வணிக வரி மற்றும் பதிவுத் துறையிலிருந்து இந்து சமய அறநிலையத் துறை நிர்வாகத்தைப் பிரிப்பதோடு, தமிழ்நாடு அரசு வணிக விதிகள், 1978-இல் திருத்தங்கள் மேற்கொள்ளவும் கோருகிறது.




## தமிழ்நாடு புதிய சட்டமன்ற-தலைமைச் செயலக வளாகம்




- சென்னை பட்டினப்பாக்கத்தில் (பட்டினப்பாக்கம் எஸ்டேட்) புதிய சட்டமன்ற-தலைமைச் செயலக வளாகம் கட்ட தமிழ்நாடு அரசு கொள்கை அளவிலான ஒப்புதல்

அளித்துள்ளது.

- தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் வருவாய்த் துறை ஆகியவற்றின் கீழ் உள்ள 25.55 ஏக்கர் நிலத்தில் இந்த வளாகம் கட்டப்படவுள்ளது.
- முன்மொழியப்பட்ட இந்த வளாகம் சுமார் 20 லட்சம் சதுர அடி பரப்பளவைக் கொண்டிருக்கும், மேலும் இதன் மதிப்பு சுமார் ₹1,200 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.
- மூன்று மாதங்களுக்குள் விரிவான திட்ட அறிக்கையை (DPR) தயாரிக்குமாறு பொதுப் பணித் துறைக்கு (PWD) அறிவுறுத்தப்பட்டுள்ளது.
- தற்போது, தமிழ்நாடு சட்டமன்றம் மற்றும் தலைமைச் செயலகம் ஆகியவை வரலாற்றுச் சிறப்புமிக்க புனித ஜார்ஜ் கோட்டை வளாகத்தில் இருந்து செயல்பட்டு வருகின்றன.

## த.வெ.க-விற்கு மாநிலக் கட்சி அந்தஸ்து

- இந்தியத் தேர்தல் ஆணையத்தின் (ECI) பரிந்துரைக்கப்பட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்த பிறகு, தமிழக வெற்றிக் கழகத்தை (TVK) தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் மாநிலக் கட்சியாக அங்கீகரித்துள்ளது.
- த.வெ.க முன்னர் பதிவு செய்யப்பட்ட ஆனால் அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சியாக இருந்தது; இந்த அங்கீகாரமானது அதன் 'விசில்' தேர்தல் சின்னத்தை ஒதுக்கித் தர அனுமதிக்கிறது.
- தமிழ்நாட்டில், 2026 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்ட 233 இடங்களில் 108 இடங்களை 34.92% வாக்கு சதவீதத்துடன் த.வெ.க வென்றது.
- புதுச்சேரியில், போட்டியிட்ட 28 இடங்களில் 2 இடங்களை 16.85% வாக்கு சதவீதத்துடன் த.வெ.க வென்றது.

### *மாநிலக் கட்சியாக அங்கீகரிக்கப்படுவதற்கான நிபந்தனைகள்*

- ஒரு மாநிலம்/ஒன்றியப் பிரதேசத்தில் பின்வரும் நிபந்தனைகளில் ஏதேனும் ஒன்றைப் பூர்த்தி செய்தால் ஒரு அரசியல் கட்சி மாநிலக் கட்சியாக அங்கீகரிக்கப்படும்.
- மாநிலச் சட்டமன்றத் தேர்தலில் 6% செல்லுபடியாகும் வாக்குகளைப் பெற்றிருக்க வேண்டும், மேலும் குறைந்தது 2 சட்டமன்ற இடங்களை வென்றிருக்க வேண்டும்.
- மாநிலத்தில் நடைபெறும் மக்களவைத் தேர்தலில் 6% செல்லுபடியாகும் வாக்குகளைப் பெற்றிருக்க வேண்டும், மேலும் குறைந்தது 1 மக்களவை இடத்தையாவது வென்று இருக்க வேண்டும்.
- மொத்தச் சட்டமன்ற இடங்களில் குறைந்தது 3% இடங்கள் அல்லது 3 இடங்கள், இதில் எது அதிகமோ அதனை வென்றிருக்க வேண்டும்.
- மக்களவையில் மாநிலத்திற்கு ஒதுக்கப்படும் ஒவ்வொரு 25 இடங்களுக்கும் குறைந்தது 1 மக்களவை இடத்தையாவது வென்றிருக்க வேண்டும்.
- மாநிலச் சட்டமன்ற அல்லது மக்களவைத் தேர்தலில் மொத்த செல்லுபடியாகும் வாக்குகளில் குறைந்தது 8% வாக்குகளைப் பெற்றிருக்க வேண்டும்.

### *தேசியக் கட்சியாக அங்கீகரிக்கப்படுவதற்கான நிபந்தனைகள்*

- இவற்றில் ஏதேனும் ஒன்றைப் பூர்த்தி செய்தால் ஒரு அரசியல் கட்சி தேசியக் கட்சியாக அங்கீகரிக்கப்படும்.
- மக்களவை/சட்டமன்றத் தேர்தல்களில் 4 அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களில் 6% செல்லுபடியாகும் வாக்குகளைப் பெற்றிருக்க வேண்டும், மேலும் குறைந்தது 4 மக்களவை இடங்களை வென்றிருக்க வேண்டும்.

- குறைந்தது 3 மாநிலங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.பி.க்களுடன் மொத்த மக்களவை இடங்களில் குறைந்தது 2% இடங்களை வென்றிருக்க வேண்டும்.
- குறைந்தது 4 மாநிலங்களிலாவது மாநிலக் கட்சியாக அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும்.





## தமிழ்நாட்டின் பத்தாண்டு காலக் கடன்

- இந்தியாவின் தலைமை கணக்குத் தணிக்கையாளர் (CAG) மேற்கொண்ட, 2024-25 ஆம் ஆண்டுக்கான மாநில நிதிநிலை குறித்த தணிக்கை, குறிப்பாக நிதி நிலைத்தன்மை தொடர்பான சில உள்நோக்குகளை வழங்கியுள்ளது.
- தலைமை கணக்குத் தணிக்கையாளர் அறிக்கையின்படி, 2015-16 முதல் 2024-25 ஆம் ஆண்டு வரையிலான பத்தாண்டு காலத்தில், மாநிலத்தின் மொத்த நிலுவையில் உள்ள பொதுக் கடன் ₹1,94,096 கோடியிலிருந்து ₹7,94,107 கோடியாக, அதாவது 309% அளவுக்குக் கணிசமாக அதிகரித்துள்ளது.
- 2024-25 ஆம் ஆண்டில் மட்டும், நிலுவையில் உள்ள பொதுக் கடன் 15.16% அதிகரித்துள்ளது, இதில் உள்நாட்டுக் கடனே பெரும் பகுதியைக் கொண்டுள்ளது.
- மாநில அரசின் மொத்தப் பொறுப்புகள் பொதுவாக மாநிலத்தின் உள்நாட்டுக் கடன் (சந்தைக் கடன்கள், இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து பெறப்பட்ட வழிமுறைகள் மற்றும் வழிமுறைகள் முன்பணங்கள், தேசிய சிறு சேமிப்பு நிதிக்கு வழங்கப்பட்ட சிறப்புப் பத்திரங்கள் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் போன்றவை), மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் மற்றும் முன்பணங்கள், மற்றும் பொதுக் கணக்குப் பொறுப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கியது.
- உண்மையில், கடந்த 10 ஆண்டுகளில் உள்நாட்டுக் கடன் கிட்டத்தட்ட 3.69 மடங்கு அதிகரித்துள்ளது, அதே காலகட்டத்தில் அதற்கேற்ற திருப்பிச் செலுத்தும் தொகை சுமார் 6.70 மடங்கு அதிகரித்துள்ளது.
- முந்தைய ஆண்டுகளில் பெறப்பட்ட கடன்களுக்கு வழங்கப்பட்ட தற்காலிகத் தடை மற்றும் திரட்டப்பட்ட கடந்தகாலக் கடன்களுக்கான சேவை ஆகியவை திருப்பிச் செலுத்தும் சுமை அதிகரித்ததற்குக் காரணமாகும்.
- மேலும், 2024-25 ஆம் நிதியாண்டில் செலுத்தப்பட்ட வட்டியானது ₹48,852 கோடியாக இருந்தது, இது ₹38,470 கோடியாக இருந்த அசல் திருப்பிச் செலுத்துதலை விட அதிகமாகும் என்பது கவனிக்கப்பட்டது.

- இது அரசின் கடன் கடமைகளிலிருந்து எழும் உறுதிசெய்யப்பட்ட செலவினங்களின் அதிகரித்து வரும் அளவைப் பிரதிபலிக்கிறது.
- கடன் வாங்கிய நிதிகள், மூலதன உருவாக்கம் மற்றும் வளர்ச்சி நடவடிக்கைகளுக்கு நிதியளிக்கப் பயன்படுத்தப்பட வேண்டும்.
- நடப்பு நுகர்வு மற்றும் நிலுவையில் உள்ள கடன்களுக்கான வட்டியைத் திருப்பிச் செலுத்துவதற்கு கடன் வாங்கிய நிதிகளைப் பயன்படுத்துவது ஒரு ஆரோக்கியமான போக்காக இல்லை.
- தணிக்கை செய்யப்பட்ட ஆண்டில், பெறப்பட்ட நிதியில் (பொதுக் கடன்) கணிசமான பகுதி வருவாய் செலவினத்திற்காகவும் (34%) மற்றும் கடன் திருப்பிச் செலுத்துவதற்காகவும் (28%) பயன்படுத்தப்பட்டது. இதனால், மூலதன உருவாக்கம் மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கான நிதி ஆதாரம் குறைவாகவே இருந்தது.
- கடனின் ஒரு பெரும் பகுதி (சுமார் 43%) ஒப்பீட்டளவில் குறுகிய முதல் நடுத்தர காலத்திற்குள் (0-7 ஆண்டுகள்) திருப்பிச் செலுத்தப்பட வேண்டும் என்பது, அரசின் மீது அதிகரித்து வரும் பணப்புழக்க அழுத்தத்தைக் குறிக்கிறது.
- இது பிற்காலங்களில் ஒரு பெரும் நிதிப் பொறுப்பை உருவாக்கக்கூடும், இது போன்ற ஆண்டுகளில் அரசு புதிய கடன்களைப் பெருமளவில் சார்ந்திருக்க வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தக்கூடும்.
- மேலும், அரசின் மொத்தக் கடன்களில் கணிசமான பகுதி, ஏற்கனவே உள்ள கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காகவே தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருவதை தணிக்கை அறிக்கை கவனித்தது.
- புதிய கடன்களில் ஒரு குறிப்பிடத்தக்க பங்கு, உற்பத்தி சார்ந்த மூலதனச் செலவினங்களுக்கு நிதியளிப்பதற்குப் பதிலாக, கடன் புதுப்பிப்புகளுக்காகப் பயன்படுத்தப்பட்டது என்பதை இது குறிக்கிறது. இதன் விளைவாக, கடன் பெற்ற நிதிகளின் நிகர இருப்பு குறைந்துள்ளது.
- இத்தகைய போக்கு, புதிய வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்வதற்கான அரசின் திறனைக் கட்டுப்படுத்துவதோடு, உற்பத்தி சார்ந்த முதலீடுகளை ஆதரிப்பதற்குப் பதிலாக, கடன் சேவைச் சுழற்சிக்குள் நுழையும் அபாயத்தையும் அதிகரிக்கிறது.
- கடன் சேவைக்கான நிதித்திறனை அளவிடும், வருவாய் வரவுகளுக்கான வட்டி செலுத்துதல்களின் விகிதம், 2024-25 ஆம் ஆண்டில் 21.18% ஆக அதிகரித்துள்ளது. அதிகரித்து வரும் கடன் சேவைச் செலவுகள் கவலைக்குரிய விஷயமாக இருக்கும்.
- கடந்த ஐந்து ஆண்டுகளில், 2020-21-ஆம் ஆண்டில் மட்டுமே கடன் நிலைப்படுத்தல் எதிர்மறையாக இருந்தது.
- 2021-22 ஆம் ஆண்டு முதல், அது நேர்மறையாக மாறி, 2024-25 ஆம் ஆண்டு வரை அப்படியே நீடித்தது.
- இந்த நேர்மறையான கடன் நிலைப்படுத்தல், கடன்-மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) விகிதத்தில் ஏற்பட்ட சரிவைப் பிரதிபலிக்கிறது மற்றும் கடன் திருப்பிச் செலுத்தும் திறனைப் பொறுத்தவரை அரசு தற்போது ஒரு நிலையான நிலையில் இருப்பதைக் குறிக்கிறது.
- தலைமை கணக்குத் தணிக்கையாளரின் (CAG) கூற்றுப்படி, வருவாயை அதிகரிப்பதன் மூலமும், செலவினங்களை முறைப்படுத்துவதன் மூலமும் பற்றாக்குறைகளை மேம்படுத்த முடியும். இதில் வரி இணக்கத்தை வலுப்படுத்துதல், வரித் தளத்தை விரிவுபடுத்துதல், பயனர் கட்டணங்களைத் திருத்தியமைத்தல் மற்றும் பயன்படுத்தப்படாத அரசு சொத்துக்களைப் பணமாக்குதல் ஆகியவை அடங்கும்.
- செலவினங்களைப் பொறுத்தவரை, மானியங்களைச் சிறப்பாக இலக்கு வைத்தல், சம்பளம் மற்றும் ஓய்வூதிய வளர்ச்சியைக் கட்டுப்படுத்துதல் மற்றும்


செலவினங்களை முறையாக வகைப்படுத்துவதை உறுதி செய்தல் ஆகியவை முக்கிய காரணிகளாகும்.

- உற்பத்தி சார்ந்த மூலதன முதலீட்டிற்கு முன்னுரிமை அளிப்பதும், வெளிப்படையான மற்றும் திறமையான கடன் வாங்குதல் மூலம் கடன் நிர்வாகத்தை மேம்படுத்துவதும் நிதி அழுத்தத்தை மேலும் குறைக்க உதவும்.




## சர்வதேசச் செய்திகள்

### சுகாதாரம் குறித்த திலி பிரகடனம்





- உலக சுகாதார அமைப்பின் (WHO) தென்கிழக்கு ஆசியாவிற்கான பிராந்தியக் குழுவின் 79-வது அமர்வு (RC79), தைமூர்-லெஸ்டேயில் உள்ள திலியில் "சுகாதாரத்திற்கான மனித வளங்கள் மீதான திலி பிரகடனம்: சிறப்புப் பராமரிப்பில் சமத்துவம்" என்பதனை ஏற்றுக்கொண்டது.
- இந்தப் பிரகடனம் சுகாதாரப் பணியாளர்களின் பற்றாக்குறையைக் குறைப்பதிலும், குறிப்பாக கிராமப்புற, தொலைதூர மற்றும் பின்தங்கிய பகுதிகளில் நிபுணர்களின் சமமற்ற விநியோகத்தைக் குறைப்பதிலும் கவனம் செலுத்துகிறது.
- உறுப்பு நாடுகள் சிறப்பான சுகாதாரப் பணியாளர்களைத் தேர்ந்தெடுத்தல்,

பணியமர்த்துதல், தக்கவைத்தல் மற்றும் அவர்களுக்குப் பயிற்சி அளித்தல் ஆகியவற்றுடன் வலுவான பரிந்துரை அமைப்புகள் மற்றும் தொலைத்தொடர்பு மருத்துவம் ஆகியவற்றை மேம்படுத்த உறுதியளித்துள்ளன.

- 2014 ஆம் ஆண்டு முதல் இந்தியாவின் மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை 387-இல் இருந்து 858 ஆக அதிகரித்துள்ளது; எம்.பி.பி.எஸ் இடங்கள் 51,348-இல் இருந்து 1,42,464 ஆகவும், முதுகலை இடங்கள் 31,185-இல் இருந்து 86,287 ஆகவும் உயர்ந்துள்ளன.
- இந்தியா 157 புதிய செவிலியர் கல்லூரிகளை நிறுவி, ஆண்டுக்கு சுமார் 15,700 செவிலியர் பட்டதாரிகளை உருவாக்கி வருகிறது, மேலும் அடுத்த ஐந்து ஆண்டுகளில் 1 லட்சம் அதனுடன் தொடர்புடைய மற்றும் சுகாதாரப் பணியாளர்களை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது.
- மகப்பேறு மற்றும் பிறந்த குழந்தைக்கான டெட்டனஸ்/ரணஜன்னி ஒழிப்பைத் தக்கவைத்ததற்காகவும், ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு மூலம் தொற்றா நோய்களைக் (NCD) கட்டுப்படுத்துவதில் தலைமை தாங்கியதற்காகவும் உலக சுகாதார அமைப்பின் தென்கிழக்கு ஆசியப் பிராந்தியத்தின் இரண்டு விருதுகளை இந்தியா பெற்றுள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## BAM-H24 ஏவுகல எரிபொருள்




- திட ஏவுகல உந்துசக்தியான BAM-H24-க்காக DRDO மற்றும் ஹைதராபாத் பல்கலைக் கழகத்திற்கு இந்தியக் காப்புரிமை அலுவலகம் காப்புரிமையை வழங்கியுள்ளது.
- BAM-H24 என்பது திட ராக்கெட் எரிபொருள், எரிபொருள் சேர்க்கை அல்லது எரிதல்-விகித முடுக்கியாகப் பயன்படுத்த வடிவமைக்கப்பட்ட போரான், ஹைட்ரஜன் மற்றும் நைட்ரஜன் நிறைந்த ஆற்றல்மிக்க சேர்மமாகும்.
- இது வேதியியல் மற்றும் வெப்ப ரீதியாக நிலையானது, நீர் உறிஞ்சாதது மற்றும் தாக்கம் மற்றும் உராய்வுக்கு மிகவும் உணர்வற்றது என விவரிக்கப்பட்டுள்ளது.
- இந்தச் சேர்மம் உயர் ஆற்றல் பொருட்களில் மேம்பட்ட ஆராய்ச்சி மையத்தின்

(ACRHEM) ஆராய்ச்சியாளர்கள் மற்றும் ஹைதராபாத் பல்கலைக்கழகத்தால் உருவாக்கப் பட்டது.

❖ இந்தப் பொருள் பாதுகாப்பு உந்துவிசை அமைப்புகள் மற்றும் விண்வெளி ஏவுதள வாகனங்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

# மாநிலச் செய்திகள்

## தொடக்கப் பள்ளிகளில் பூஜ்ஜிய இடைநிற்றல் - திரிபுரா


❖ கல்விக்கான ஒருங்கிணைந்த மாவட்ட தகவல் அமைப்பு பிளஸ் (UDISE+) தரவுகளின் படி, 2025-26 ஆம் கல்வியாண்டில் 1-5 வகுப்புகளில் திரிபுரா பூஜ்ஜிய சதவீத இடை நிற்றல் விகிதத்தைப் பதிவு செய்துள்ளது.

❖ திரிபுராவின் தொடக்கப் பள்ளி இடைநிற்றல் விகிதமானது 2013-14 ஆம் ஆண்டில் 2.21 சதவீதத்திலிருந்து 2025-26 ஆம் ஆண்டில் 0 சதவீதமாகக் குறைந்துள்ளது.

❖ இதே காலகட்டத்தில் இடைநிலை அளவிலான இடைநிற்றல் விகிதமும் 25.51 சதவீதத்திலிருந்து 10.40 சதவீதமாகக் குறைந்துள்ளது.

❖ நிபுண் (NIPUN) பாரத் திட்டம் மற்றும் சஹர்ஷா திரிபுரா உள்ளிட்ட முன்னெடுப்புகளுடன் இந்த முன்னேற்றத்தை அம்மாநிலம் இணைத்துள்ளது.

❖ இரண்டு ஆண்டுகளுக்குள் அனைத்து 2,048 தொடக்கப் பள்ளிகளிலும் பால்வாடிப் பள்ளிகளை (பாலர் வகுப்புகள்) அறிமுகப்படுத்த திரிபுரா திட்டமிட்டுள்ளது.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## ஆசிய-பசிபிக் அஞ்சல் ஒன்றியம் - வினய பிரகாஷ் சிங்

❖ இந்திய அஞ்சல் சேவையின் (IPoS) மூத்த அதிகாரியான வினய பிரகாஷ் சிங், ஆசிய-பசிபிக் அஞ்சல் ஒன்றியத்தின் (APPU) பொதுச் செயலாளராக இரண்டாவது நான்கு ஆண்டு பதவிக் காலத்திற்கு (2027-2030) போட்டியின்றி மீண்டும் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

❖ APPU என்பது 32 ஆசிய-பசிபிக் நாடுகளின் அரசுகளுக்கிடையேயான அமைப்பாகும், மேலும் இது உலகளாவிய அஞ்சல் ஒன்றியத்தின் (UPU) கீழ் உள்ள ஒரு பிராந்திய

ஒன்றியமாகும்.

- இது தாய்லாந்தின் பாங்காக்கை தலைமையிடமாகக் கொண்டு செயல்படுகிறது, மேலும் உறுப்பு நாடுகளிடையே அஞ்சல் ஒத்துழைப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- APPU 1962 ஆம் ஆண்டில் ஆசிய-ஓசியானிக் அஞ்சல் ஒன்றியமாக (AOPU) உருவாகி, 1981 ஆம் ஆண்டில் APPU என மாறியது.
- இது அப்பிராந்தியத்தில் அஞ்சல் ஒத்துழைப்பு, எல்லை தாண்டிய தளவாடங்கள், மின்-வணிகம் மற்றும் தொழில்நுட்பத் திறன் மேம்பாடு ஆகியவற்றை ஊக்குவிக்கிறது.




## விளையாட்டுச் செய்திகள்

### உலக வில்வித்தை பாரா தொடர் 2026

- அகமதாபாத்தில் நடைபெற்ற உலக வில்வித்தை பாரா தொடரின் மூன்றாம் கட்டப் போட்டியில் இந்தியா 15 பதக்கங்களை வென்றது.
- இந்தியா நான்கு தங்கம், மூன்று வெள்ளி மற்றும் எட்டு வெண்கலப் பதக்கங்களை வென்றது.
- ஷீத்தல் தேவி மகளிர் காம்பவுண்ட் பிரிவில் தங்கம் வென்றார்; தோமன் குமார் மற்றும் ஷ்யாம் சுந்தர் சுவாமி ஆடவர் காம்பவுண்ட் இரட்டையர் பிரிவில் தங்கம் வென்றனர்.
- ஹர்விந்தர் சிங் மற்றும் விஜய் சுண்டி ஆடவர் ரிகர்வ் இரட்டையர் பிரிவில் தங்கம் வென்றனர்; பவ்னா மற்றும் ஹர்விந்தர் சிங் ரிகர்வ் கலப்பு அணிப் பிரிவில் தங்கம் வென்றனர்.
- பவ்னா மற்றும் பூஜா ரிகர்வ் இரட்டையர் பிரிவில் வெள்ளி வென்றனர்; ஸ்வாதி


சௌத்ரி மற்றும் ஆதில் அன்சாரி W1 கலப்பு அணிப் பிரிவில் வெள்ளி வென்றனர்; தன்வி இங்காலே பார்வையற்றோர் வில்வித்தை பிரிவில் வெள்ளி வென்றார்.

- இந்தியாவின் வெண்கலப் பதக்கம் வென்றவர்கள் காம்பவுண்ட், ரிகர்வ், W1 (சக்கர நாற்காலி 1) மற்றும் பார்வையற்றோர் வில்வித்தைப் போட்டிகளில் பங்கேற்றனர்.




## முக்கிய தினங்கள்

### இமயமலை தினம் 2026 - செப்டம்பர் 09





- இந்த தினமானது இமயமலைச் சூழலியல் அமைப்பின் முக்கியத்துவத்தையும் அதன் பாதுகாப்பையும் எடுத்துக்காட்டுகிறது.
- இமயமலைப் பாதுகாப்பு, நிலையான வளர்ச்சி மற்றும் சமூகப் பங்கேற்பு

ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக வேண்டி இது 2015 ஆம் ஆண்டில் உத்தரகாண்டில் முதன்முதலில் அறிவிக்கப்பட்டது.

- இந்து குஷ் இமயமலையானது (HKH) சிந்து, கங்கை மற்றும் பிரம்மபுத்திரா போன்ற முக்கிய நதிகளுக்கான முக்கியமான நீர் ஆதாரமாக விளங்குகிறது.
- ஒருங்கிணைந்த மலை மேம்பாட்டிற்கான சர்வதேச மையத்தின் (ICIMOD) பனிநிலை புதுப்பிப்பு 2026 ஆனது சராசரியை விட 27.8% குறைவான பனிப்பொழிவு உள்ளதாகப் பதிவு செய்துள்ளது, 12 முக்கிய நதிப்படுகைகளில் 10 நதிப்படுகைகள் இயல்பை விடக் குறைவான பனிப்பொழிவைக் கொண்டுள்ளன.
- பனிப்பாறைகள் உருகுவதானது நீண்ட கால இயற்கை நீர் சேமிப்பைக் குறைப்பதோடு உருகும் பனிப்பாறை ஏரிகளால் உருவாகும் திடீர் வெள்ளப் பெருக்கு (GLOFs) போன்ற அபாயங்களையும் அதிகரிக்கலாம்.

# இதரச் செய்திகள்

## இந்தியாவின் புதிய யுனெஸ்கோ தற்காலிகத் தளங்கள்




- யுனெஸ்கோ உலகப் பாரம்பரியத் தற்காலிகப் பட்டியலில் இந்தியாவின் நான்கு கலாச்சாரப் பாரம்பரியத் தளங்கள் சேர்க்கப்பட்டுள்ளன, இதன் மூலம் இந்தியாவின் மொத்த தளங்களின் எண்ணிக்கை 73 ஆக உயர்ந்துள்ளது.
- ரங்க்பூர்-சிவசாகர் வரலாற்றுத் தொகுப்பு (அசாம்), காலனித்துவ தண்டனைக் குடியிருப்பு (அந்தமான் தீவுகள்), நிக்கோபார் கலாச்சாரத் தொடர்ச்சி (நிக்கோபார் தீவுகள்) மற்றும் ஷெகாவதியின் வர்ணம் பூசப்பட்ட ஹவேலி நகரங்கள் (ராஜஸ்தான்) ஆகியவையே அந்த நான்கு தளங்களாகும்.
- சிவசாகர் அகோம் பேரரசின் தலைநகரமாக விளங்கியது, அதே சமயம் ஷெகாவதியானது ஹவேலிகளில் வர்ணம் பூசப்பட்ட சுவரோவியங்களுக்குப் பெயர்

பெற்றதாகும்.

- உலகப் பாரம்பரியப் பட்டியலில் சேர்க்கப் பரிந்துரைக்கப்படுவதற்கு முன்பு ஒரு தளமானது குறைந்தது ஒரு வருடமாவது தற்காலிகப் பட்டியலில் இருக்க வேண்டும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★